மாணவர்கள் சேர்ந்து படிப்பதற்கு அங்கே இடங்கள் இருக்கின்றன. ஆனால், தற்போது 3,650 மாணவர்கள்தான் அங்கே கல்வி பயின்று வருகிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தேவையான, கூடுதலான மாணவர்கள் சேர்க்கைக்கான இடங்கள் அங்கே இருக்கின்றன. ஆகவே, பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளில் படிக்க ஆர்வம் உள்ள மாணவர்கள் அங்கே சேர்ந்து கல்வி பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தினால், புதியதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவங்குவது குறித்து அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 126, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

126—

கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம்

***47600 திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடையில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் இருக்கை நோக்கி வணங்கி, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட காரமடை பகுதியில்

கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்து விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. வெளிச்சந்தையில் கொப்பரை விலை அரசு ஆதரவு விலையைவிடக் குறைவாக இருக்கும்போது காரமடை பகுதியில் கொப்பரை கொள்முதல் நிலையம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்."

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப எதிரிகள் எத்தனை துன்பங்களை இழைத்தாலும், அத்தனையையும் கண்டு கலங்காமல் அந்தத் துன்பத்தையே துன்பத்தில் ஆழ்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) சூழ்ச்சிகள், சோதனைகள் அனைத்தையும் முறியடித்து ஜனநாயகத்தின் இறுதி எஜமானர்களாகிய மக்கள் மன்றத்திலே மகத்தான வெற்றியைப் பெற்று தமிழ் மக்களின் நலனுக்காக தன்னலம் பாராமல் உழைக்கும் தமிழ் அன்னையே! இனி என்றென்றும் வெற்றி திருமகள் வந்து தொழுதிடுவாள் நின்னையே! தாயே! என வணங்குகிறேன்.

முற்பகல் 10–30

மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டி இருக்கின்ற ஒரு பகுதி. அந்தப் பகுதி விவசாயத்தையே முழுமையாக நம்பி வாழ்கின்ற பகுதி. கடந்த காலத்திலே குறுகிய காலப் பயிர்களான கரும்பு, சோளம், பருத்தி மற்றும் நெல் போன்ற பயிர்களைப் பயிரிட்டு வந்தார்கள். ஆனால், இன்றைக்கு இயற்கைச் சூழ்நிலையின் காரணமாக தண்ணீர் மற்றும் பல்வேறு இடர்பாடுகளின் காரணமாக விவசாயத்தை மாற்றி நீண்டகாலப் பயிரான தென்னை நாற்றைப் பயிர் செய்து வருகிறார்கள். அந்தத் தென்னை மரங்களை ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில்

2015 ஆகஸ்ட் 25]

பயிரிட்டு வருகிறார்கள். அதிலே விளைகின்ற தேங்காயை விலைப்படுத்த வேண்டுமென்று சொன்னால், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, காங்கேயம் போன்ற பகுதிகளில் அமைந்திருக்கின்ற கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையங்களுக்கு எடுத்துச்செல்ல வேண்டியிருக்கின்றது. அப்படி வெகுதூரம் எடுத்து செல்கிறபோது, அவர்களுக்கு போக்குவரத்துச் செலவும், காலமும் விரயமும் ஆகின்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து காரமடை பகுதியில் ஒரு கொப்பரைத் தேங்காய் கொள்முதல் நிலையத்தை வருகிற காலத்திலேயாவது அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 424.12 இலட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தோராயமாக, ஒரு ஹெக்டேருக்கு 11,965 தேங்காய்கள் விளைவிக்கப்படுகின்றன. இதில் காரமடை பகுதியைப் பொறுத்தளவுக்கு 1,807 ஹெக்டேர் நிலப்பரப்பில் தென்னை பயிரிடப்படுகிறது. ஏறத்தாழ, ஆண்டொன்றுக்கு 3,160 டன் கொப்பரை கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு இருக்கிறது. தற்போது* NAFED *னுடைய, மைய அரசினுடைய கொப்பரையின் விலை மதிப்பானது ஒரு கிலோவிற்கு 55 ரூபாய் 50 காசுகள் என்றும், பந்து கொப்பரையின் விலை 58 ரூபாய் 30 காசுகள் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில் தனியாரிடத்திலே, இன்றைக்கு கொப்பரையினுடைய விலை கூடுதலாக இருக்கிறது. கடந்த 22 ஆம் தேதி பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஏறத்தாழ 79 ரூபாய்க்கு ஒரு கிலோ கொப்பரை விலை போயிருக்கிறது. எனவே, விவசாயிகள் யாரும்* NAFED *மூலமாக கொப்பரை விற்பதற்கு முன்வருவதில்லை. அப்படி முன்வருகின்றபோது இந்தக் கொப்பரையின் விலை வெளிச்சந்தையில் குறையும்பட்சத்தில், கூடுதலாக விலை கிடைக்கின்ற வகையில் விவசாயிகளுக்கு உரிய வழிவகை செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியிலே இருக்கின்ற விவசாயிகள் சேர்ந்து, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கோரிக்கை மனுவைக் கொடுக்கும்பட்சத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலமாக கொப்பரை கொள்முதல் செய்வதற்கான சாத்தியகூறுகள் குறித்து ஆராயப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 127, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

127—

மாற்று மலைப்பாதை அமைத்தல்

***50715 திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணியிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு மேற்குப் பகுதியில் மாற்று மலைப்பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?